005673

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016
## தமிழ் மொழியும் இலக்கியமும் I

தரம் - 11 நேரம் : 3 மணித்தியாலம்.

சுட்டெண் :........................................ புள்ளி :

**கவனிக்க வேண்டியவை:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) 'தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன்' இங்கு **கயம்** என்பது
   1. மலை 2. கடல் 3. குளம் 4. ஆறு

2) "கணக்காயர் இல்லாத ஊர்" இங்கு **கணக்காயர்** என்பவர்
   1. கணக்காளர் 2. காப்பாளர் 3. ஆசிரியர் 4. அறிஞர்

3) உயிரை விடவும் மானத்தைக் காத்தவன் அர்ச்சுனன். இங்கு **மானம்** என்பதன் எதிர்க்கருத்து
   1. மரியாதை 2. அவமானம் 3. தீர்மானம் 4. மதிப்பு

4) தமிழ் நாட்டில் சினிமா வளராததற்குக் காரணம் நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தமையே. இங்கு **அடிமை** என்பதன் எதிர்க்கருத்து
   1. ஆண்டான் 2. எஜமானன் 3. எஜமானி 4. அடியான்

5) "வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்..." இங்கு **மந்தி** என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1. பெட்டை 2. அலவன் 3. கடுவன் 4. போத்து

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

6) யானை - பிளிறும் என்பது போல எருது
   1. கத்தும் 2. கதறும் 3. முக்காரமிடும் 4. உறுமும்

7) சிங்கத்தின் இளையது குருளை போல மக்களின் இளையது
   1. குட்டி 2. மனிதன் 3. உயிர் 4. குழவி



kalvi.lk

8) மேகம், ஆபரணம், வலிமை, அழகு என்னும் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
1. மஞ்சு 2. கலம் 3. உரம் 4. அணி

9) கற்றலின் போது மாணவர்களை மொனிற்றறிங்(Monitoring) செய்யவேண்டியது அவசியமாகும். Monitoring என்பதற்குரிய தமிழ்ச்சொல்
1. மதிப்பீடு 2. கண்காணித்தல் 3. நேர்முகம் 4. ஊக்கம்

10) பொன்னை உரைத்து அதன் தரம் அறிய உபயோகிக்கப்படும் கல்
1. கருங்கல் 2. பவளக்கல் 3. உரைகல் 4. பொற்கல்

11) கருவறுத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்
1. முற்றாக அழித்தல் 2. முற்றாக விலகல் 3. பிடிவாதம் 4. ஆபத்திற் கைவிடுதல்

12) 'அறிவு தெளிதல்' என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
1. கண்திறத்தல் 2. கண்கலத்தல் 3. கண்வைத்தல் 4. கண்ணறுதல்

13) மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
1. மாராயம் 2. ஓலக்கம் 3. ஏகபோகம் 4. ஓம்படை

14) பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்துவகை
1. ஓலக்கம் 2. அரங்கேற்றம் 3. பொதுவியல் 4. வடக்கிருத்தல்

15. 'தெட்டத் தெளிவு' என்பதனைக் குறிக்கப் பொருத்தமான உவமைத்தொடர்
1. உள்ளங்கை நெல்லிக்கனி போல 2. நீர்க்குட் பாசி போல
2. இலைமறை காய் போல 4. தாமரை இலைத் தண்ணீர் போல

16. வாலிபத் துணிவை உணர்த்தும் பழமொழி
1. கனிந்த பழம் தானே விழும். 2. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
2. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான். 4. இளம் கன்று பயம் அறியாது.

17. "அலை மோதும் போதே தலை முழுகு" என்ற பழமொழியின் கருத்து
1. கடலில் குளிப்பது ஆபத்தானது. 2. இளமையில் கற்க வேண்டும்.
3. சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது. 4. புறத்தூய்மை அவசியம்.

18. ஒருவர் வருகைக்காகக் காத்திருப்பதைக் குறிக்கும் அருஞ் சொற்றொடர்
1. வழிமேல் விழிவைத்து 2. நுண்மாண் நுழைபுலம்
4. அகமும் முகமும் மலர்ந்து 4. கண்ணுக்குக் கண்ணாக.

19. 'வாடி வதங்கி' என்ற இணைமொழியின் பொருளைத் தரும் மற்றோர் இணைமொழி
1. தட்டுமுட்டு 2. எலும்பும் தோலும் 3. சூதுவாது 4. அரைகுறை

20. அந்தி வானம் செக்கச்சிவந்திருந்தது. 'செக்கச்சிவந்து' என்பது
1. அடுக்கிடுக்குத் தொடர் 2. இணைமொழி
3. அடுக்குத் தொடர் 4. இரட்டைக்கிளவி



kalvi.lk

- பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

21. "உண்டனன்" இதில் **இடம்பெறாத** பகுபத உறுப்பு
1. பகுதி 2. சாரியை 3. சந்தி 4. விகுதி

22. எத்தனை மணிக்கு வருவீர்கள்? இங்கு 'கு' உருபு உணர்த்தும் பொருள்
1. அனுபவப் பேறு 2. காலக் குறிப்பு 3. வருகை 4. காரணம்

23. பின்வருவனவற்றுள் அகப்புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
1. கடற்புறம் 2. வாருங்கள் 3. பழமரம் 4. நீர்வீழ்ச்சி

24. பின்வருவனவற்றுள் கூட்டுவினையாக அமைவது
1. வா 2. கண்டுபிடி 3. இடு 4. போ

25. செய்தவன் என்பது
1. மாற்றுப் பெயர் 2. ஆக்கப் பெயர்
3. தொழிற் பெயர் 4. வினையாலணையும் பெயர்

26. வெள்ளாடை என்பது
1. பண்புத் தொகை 2. வினைத்தொகை 3. உவமைத்தொகை 4. வேற்றுமைத்தொகை

27. பின்வருவனவற்றுள் ககரம் உச்சரிப்பு முறையால் வேறுபடுவது
1.சிங்கம் 2. தங்கம் 3. பக்கம் 4. நாங்கள்

28. உயிர்த் தொடர்க் குற்றியலுகரமாக அமைவது
1. ஆடு 2. பயறு 3. கொக்கு 4. எஃகு

29. பின்வருவனவற்றுள் இடைச்சொற்றொடருக்கு உதாரணமாக அமைவது
1. உறு துணை 2. இனி விடியும் 3. கண்ணா வா 4. முறிந்த பனை

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

30. 1. வினைமுற்று : நடந்தான், அழுகிறான், பாய்ந்தான், பறந்தது
2. செயப்பாட்டு வினை : எழுதப்படும், கடியுண்டது, பெறப்பட்டது, செய்தான்
3. செய்வினை : படித்தான், வந்தான், சென்றான், உண்டான்
4. வியங்கோள் வினை : கொணர்க, வாழ்க, ஓங்குக, நாடுக

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

31. நாட்டில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை .................................. செய்தது.
1. அறிமுகம் 2. பிரகடனம் 3. ஒலிபரப்பு 4. அறிவித்தல்



kalvi.lk

32. குற்றவாளியை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு நீதிபதியால் .............................................. பிறப்பிக்கப்பட்டது.

1. அழைப்பாணை 2. கட்டளை 3. உத்தரவு 4. பிடியாணை

33. காலபோக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு உரத்திற்கான ....................................... வழங்கப்பட்டது.

1. பங்கீடு 2. பகிர்வு 3. மானியம் 4. நன்கொடை

34. மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித பாரபட்சமுமின்றி நிவாரணம் வழங்கப்படும் என அரசு ....................................... அளித்தது.

1. அங்கீகாரம் 2. தீர்மானம் 3. அனுமதி 4. உறுதி

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான **முடிக்கும் பகுதியைத்** தெரிவு செய்க.

35. நீ கவனமாகப் படித்ததால் பரீட்சையில் ..............................................................................

1. சித்தியடைவாய். 2. சித்தியடையலாம்.
3 சித்தியடைந்தாய். 4. சித்தியடையமுடியாது.

36. நேற்றுக் கோவிலில் சனக்கூட்டம் ........................................................................................

1. நிறைந்திருந்தன. 2. நிறைந்திருந்தார்கள். 3. நிறைந்திருந்தது. 4. நிறைந்திருந்தனர்.

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

சொல்லு மழலையிலே – கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடு வாய்:
முல்லைச் சிரிப்பாலே – எனது
மூர்க்கந் தவிர்த்திடு வாய்

37. இப்பாடலில் கண்ணம்மா என்ற சொல்லினால் விளிக்கப்படுவது,

1. தந்தை 2. கவிஞர் 3. குழந்தை 4. அம்மா

38. ‘முல்லைச் சிரிப்பு’ என்பதில் அமைந்துள்ள அணி

1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. சிலேடை

39. மூர்க்கம் என்பதன் பொருள்

1. கோபம் 2. கவலை 3. மகிழ்ச்சி 4. பயம்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. அ. பாரிமகளிர் வானத்தில் தோன்றிய திங்களைக் கண்டு வருந்தினர்.
ஆ. பாரி மன்னன் பறம்பு மலையை ஆண்டான்.
இ. மூவேந்தர் சதி செய்து பறம்பு மலையைக் கைப்பற்றினர்.
ஈ. அவனுக்கு அங்கவை, சங்கவை என இரு பெண் பிள்ளைகள் இருந்தனர்.
உ. பாரியின் நண்பரான கபிலர் பாரி மகளிரைக் காப்பாற்றிச் சென்றார்.

1. ஆ,ஈ,இ,உ,அ 2. அ,ஆ,இ,ஈ,உ 3. ஆ,உ,ஈ,இ,அ 4. இ,ஈ,ஆ,உ,அ

(1x40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க வேண்டியவை:**

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

---

01. **சுருக்கமான விடை தருக.**

I. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"பொலிந்தசெழுந் தாதிறைக்கும்"

II. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் 'இந்த வருடம் நாடு சிறந்த வளர்ச்சியை அடையும்' என்று தெரிவித்தார்.

அ. இது எவ்வகை வாக்கியம்?

ஆ. இதன் தலைமைத் தொடர் யாது?

III. "அதிகாலையில் நாய்கள் குரைத்தது"

அ. இவ்வாக்கியத்தில் இடம் பெற்ற வழு யாது?

ஆ. அதனை வழுவின்றி எழுதுக.

IV. 'பறி'என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

V. பின்வருவனவற்றுள் கட்டுரையில் அமைய வேண்டியவை எவை?
சிறந்த பயன் தருதல், முரண்படக் கூறுதல், வாசிப்பதற்கு இன்பம் தரல், சந்தேகம் ஏற்படக் கூறுதல்.

VI. பின்வரும் பிரதேச வழக்கின் பொதுவழக்கைத் தருக.

அ) வெரசா -

ஆ) மடுவம் -

VII. பூவோடு நாரும் மணம் வீசும்

அ. இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?

ஆ. அதன் பொருள் யாது?

VIII. "மாடுகள் வயலை உழுதன." இச் செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியம் ஆக்குக.

IX. "பாரதியார் இனிய பாடல்களை இனிமையாகப் பாடினார்" இதில் பெயரடையையும் வினையடையையும் குறிப்பிடுக.

X. தம்பி எனது பந்தை யார் எடுத்தீர்கள் என்று கேட்டான்.
மேற்படி வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

(2x10 = 20 புள்ளிகள்)

02. **பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 - 300 சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்று வரைக. நீர் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

I. ஆதிகாலத்தில் மனிதன் புறாக்கள் மூலமும் தூதுவர்கள் மூலமும் கூக்குரல் எழுப்பியும் பலவாறாக செய்திகளைப் பரிமாற்றினான். பின்னர் படிப்படியாக விஞ்ஞானம் வளர்ச்சியடைய வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பவற்றினூடாக செய்திகளைப் பரிமாற்றினான். அந்த வகையில் வெகுசன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி அதன் விளைவுகள் பற்றி **விளக்கம்.**



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

II. மனிதர்கள் அனைவருக்கும் மொழியின் பயன்பாடு இன்றியமையாததாகும். ஒவ்வொரு மனிதரும் சுய மொழியிலேயே கற்க வேண்டும். சிந்தனை என்பது சுய மொழியிலேயே சாத்தியமாகின்றது. அத்துடன் பிறமொழிகளையும் அறிந்திருத்தல் அவனது ஆளுமையை வளர்க்கின்றது. அந்தவகையில் 'பன்மொழி ஆற்றல்' என்ற தலைப்பில் ஒரு **மேடைப் பேச்சு**.

III. கிராமம் என்பது வளம்மிக்க வயல்களும், நன்னீர் ஓடைகளும், செழிப்புற்ற புற்றரைகளும், சிறுசிறு பற்றைகளும் நிறைந்து காணப்படுவது. நகரம் என்பது செயற்கையானது. இயல்பான மனித வாழ்விற்கு கிராமத்துச் சூழலே சிறந்தது எனக் கருதும் ஒருவருக்கும், நகரத்துச் சூழலே சிறந்தது எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

IV. வசந்தன் நேர்வழியிற் செல்பவன். எதைச் செய்தாலும் அதில் ஒரு நியாயத்தை எதிர்பார்ப்பவன். ஆனால் அவனது குடும்பம் எப்போதும் வறுமையிலேயே வாடியது. குமார் நேர்வழியிற் செல்வதில்லை. பெரும் செல்வந்தன். குறுகிய காலத்தில் பெரிய பணக்காரன் ஆகிவிட்டான். தீயவர்களின் தொடர்பே அவனுக்கு எப்போதும் இருந்தது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

03. **கீழே தரப்பட்ட உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் சிவஞானசுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தினோருள் ஆறுமுகநாவலர் சிறந்தவர். கிறிஸ்து மதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை தமிழ் மொழியை வளர்த்தற்குப் பல முயற்சிகள் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்துப் பல தமிழ் நூல்களைத் திருந்திய முறையிலே பிழையறப் பதிப்பித்தார். எடுத்துக்கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றித் திருத்தமாகச் செய்யும் இயல்பினர் நாவலர் என்பதற்கு, வழுக்களின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும். செய்யுள் இலக்கியங்கள் வேண்டியளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ்மொழியை வளர்ப்பதற்குச் சிறந்த வழி என்றுகொண்டு, பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதியதோடு பல கட்டுரைகளையும் கண்டன நூல்களையும், மாணாக்கர் கற்றலுக்கு வேண்டிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். நாவலருடைய உரைநடை பழமையையும், புதுமையையும் ஒருங்கு தழுவிய முற்போக்குடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை அநுசரித்து, உரையாசிரியர்கள் எழுதிய நடை போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக்கூடிய ஆற்றலுடையவராய் இருந்தபோதிலும், தமிழினிற் குறைந்தோரும் எளிதிற் பொருள் காணக்கூடிய வகையில் காலத்திற்கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்து, ஒரு சிறந்த நடையினைக் கையாண்டு எழுதினார். அதனால் அவர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று பாராட்டப் பெற்றார்.

(10 புள்ளிகள்)



kalvi.lk

04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முறையாகக் கற்றலும் செய்யாது, கற்று வல்லாரை அடைந்து வழிபாடியற்றிப் பெறுதற்குரிய கேள்விச் செல்வமும் எய்தப்பெறாது தமிழ்த் தொண்டு செய்ய முற்படுதல் பயனில் செயலாகும். முன்னோர் மொழி பொருளையும் மரபுபட்ட இலக்கண முடிபுகளையும் ஆராய்ந்தறிந்துகொள்ளாது, நெறியறியா மாக்களை மயக்கி, அவர்தம்மை நெறியல்லா நெறியிற் புகுத்தி, ஆரவாரிப்போர் செயலானது, குருடனைக் குருடன் வழி நடத்துவது போலாகும். அவைக்களத்திற் சொல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை "வேந்தன் மொழி" (King's Engish) என அம்மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்பரிசே யாமும் அவைக்களத்திற் சொல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழினைப் "பாண்டியன் தமிழ்" என்போம். "எது தமிழ்?" என வினவுவார்க்குப் பாண்டியன் தமிழே தமிழ் " என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற்றுதற்குரியது, பொருள் வருவாய் ஒன்றினையே கருதி மனம் போனவாறு மரபு தவறி எழுதும் மொழி வழக்கானது மழைக்காலத்திலே தோன்றி அக்காலங்கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப் போல நிலைபேறில்லாதது. நிலைபேறுடைய உண்மை, அழகு, செம்மை என்னும் இவைதம்மையே அறிஞரது உள்ளம் அவாவி நிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும் இசைத் தமிழானது அழகினையும் நாடகத் தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்பத்திக் காட்டுவன.

அ) ஆராய்ந்து அறிய வேண்டியன யாவை?

ஆ) பாண்டியன் தமிழ் எத்தகையது?

இ) மரபு தவறி எழுதும் மொழி வழக்கு எத்தகையது?

ஈ) இதன் நிலை எது போன்றது?

உ) நிலைத்த தன்மைகள் எவை?

(10 புள்ளிகள்)

05.

அ. அசுத்த நீர் காரணமாக குடாநாட்டு மக்களிடையே நோய்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன. இந்நோய்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் உம்மை ஒரு சுகாதார உத்தியோகத்தராகக் கருதிப் பத்திரிகைக்கு 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

ஆ. வீதி விபத்து இன்று மக்கள் மத்தியில் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் நாளுக்கு நாள் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. அதனால் இளைஞர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனைத் தவிர்க்குமாறு இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்து 100 சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** வரைக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page